ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1921/3 - 2015 ජුනි මස 29 වැනි සඳුදා - 2015.06.29

*1921/3 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

64 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், ஹக்மன பிரதேச சபையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற ஹக்மன நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் நீர் விநியோக நடவடிக்கைகள் தொடர்பாக அச்சட்டத்தின் 63 (1) ஆம் பிரிவின் கீழ் என்னால் அனுமதியளிக்கப்பட்ட தன்னார்வ பரிமாற்ற திட்டத்தின் ஏற்பாடுகளை இக்கட்டளையின் மூலம் கீழ் காணப்படும் அட்டவணைக்கு உட்படுத்துகின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 26.

**அட்டவணை**

61 (1) ஆவது பிரிவு - தன்னார்வ பரிமாற்ற திட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள் :-

(அ) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளித்து சபைக்குச் சொந்தமாக்குதல் வேண்டும். அதாவது :-

(i) I ஆவது அட்டவணையில் பதிவு செய்யப்பட்டுள்ள இடங்களில் அமையப்பெற்றுள்ள அனைத்து நீர் மூலங்கள், நீர் தாங்கிக் கோபுரங்கள், அமுக்க கட்டுப்பாட்டு தாங்கி, பம்ப் செய்யும் இடத்தினை செயற்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்கு தேவையான சகல காணிகள், கட்டடங்கள், நீர்க் குழாய்கள், அனைத்து இயந்திரங்கள் மற்றும் மின் உபகரணங்களை பொருத்துவதற்கும், உபகரணங்களை பராமரிப்பதற்கும் தேவையான சகல உதிரிப்பாகங்களும் துணை உபகரணங்கள் மற்றும் பண்டகசாலைப் பொருட்கள் ;

(ii) ஹக்மன பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள நீர் பகிர்ந்தளிப்பு வலையமைப்பினை செயற்படுத்து வதற்கு மற்றும் பராமரிப்பதற்குத் தேவையான நீர்க் குழாய் வழிகளின் வழியுரிமைகள், உதிரிப்பாகங்கள், துணை உபகரணங்கள் மற்றும் பண்டகசாலைப் பொருட்களுடன் அனைத்து பிரதான நீர் குழாயினை பகிர்ந்தளிக்கும்.

(ஆ) மேற்கூறப்பட்ட சொத்து குறித்து திட்டமிடுதல், பொருத்துதல், நிர்மாணித்தல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமாக அகுரஸ்ஸ பிரதேச சபை பிணைப்புற்றுள்ள ஒப்பந்தங்கள், சபையின் உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் அனைத்தும் சபையிடம் கையளிக்கப்படும் ;

(இ) நீரைப் பாவித்தல் மற்றும் நீர் சேவையினை வழங்குதல் தொடர்பாக நீர் பாவனையாளர்களுடன் ஹக்மன பிரதேச சபை பிணைப்புற்றுள்ள சகல ஒப்பந்தங்களும், அந்த சேவையினை பெற்றுக் கொள்வது தொடர்பாக செலுத்த வேண்டியுள்ள கொடுப்பனவுகளும் சபையிடம் கையளிக்கப்படும்.

(ஈ) 38,31,730 ரூபா பெறுமதிமிக்க இச்சொத்துக்கள் யாவும் அரசாங்கத்தினால் நிதி உதவியடிப்படையில் சபைக்கு கையளிக்கப்படும்;

(உ) நீர் வழங்கல் சம்பந்தமாக பிரதேச சபை ஏற்கனவே செய்து கொண்டுள்ள சகல ஒப்பந்தங்களும் சபையினால் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், ஒப்பந்தங்களை நிறைவடையச் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மேற்குறித்த விடயமானது இவ் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் அமுலுக்கு வரும்.

**அட்டவணை இல. 1**

| தொடர் இல. | விபரம் | காணியின் அமைவு | விஸ்தீரணம் | | | நிலஅளவையாளரின் திட்டவரைபு இலக்கம் | உரிமை ஒப்பாவண விபரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஏ. | றூ. | பேர். | | |
| 1. | ஹக்மன நீர் சுத்திகரிப்பு மற்றும் நீர் இறைக்கும் இயந்திரசாலை அமைந்துள்ள காணி | மாத்தறை மாவட்டத்தில் ஹக்மன பிரதேச செயலகப் பிரிவில் வேபத இர என்று அழைக்கப்படும் கிராமத்தில் அமைந்துள்ள பகல பிபுலே வயல் என்றழைக்கப்படும் காணி | - | - | 9.75 | எச். கே. ஏ. ஹேமசந்திர உத்தரவுபெற்ற நில அளவை யாளரின் இல. 14/032 உடைய திட்டவரைபின் ஒரு பகுதி | ஹக்மன பிரதேச சபையினால் உடைமை குறித்த உரித்து பேணப் படும் சொத்தாகும் |
| 2. | ஹக்மன வலஸ்முல்ல வீதியில் நீர் இறைக்கும் இயந்திரசாலை அமைந்துள்ள காணி | மாத்தறை மாவட்டத்தில் ஹக்மன பிரதேச செயலகப் பிரிவில் முருதாமுரே என்றழைக்கப்படும் கிராமத்தில் அமைந்துள்ள மிகின்தவெல என்றழைக் கப்படும் காணி | - | - | 6.92 | எச். கே. ஏ. ஹேமசந்திர உத்தரவுபெற்ற நில அள வையாளரின் இல. 14/034 உடைய திட்டவரைபின் ஒரு பகுதி | ஹக்மன பிரதேச சபையினால் உடைமை குறித்த உரித்து பேணப் படும் சொத்தாகும் |
| 3. | முருதாமுரே நீர் இறைக்கும் இயந்திரசாலை அமைந்துள்ள காணி | மாத்தறை மாவட்டத்தில் ஹக்மன பிரதேச செயலகப் பிரிவில் முருதாமுரே என்றழைக்கப்படும் கிராமத்தில் அமைந்துள்ள கருவகொட மற்றும் வன்னி யாராச்சிகே கெபல்ல என்ற ழைக்கப்படும் காணி | - | - | 9.88 | எச். கே. ஏ. ஹேமசந்திர உத்தரவுபெற்ற நில அள வையாளரின் இல. 14/035 உடைய திட்டவரைபின் ஒரு பகுதி | ஹக்மன பிரதேச சபையினால் உடைமை குறித்த உரித்துப் பேணப் படும் சொத்தாகும் |

7 - 613

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.